www.tamilarangam.net

# அறிவோர் பக்கம்

ஆண்டு 08 ஆனி 2004 இதழ் 04

## தமிழ்

தமிழ் மொழியில் உயிர் எழுத்துக்கள் என அ,ஆ,இ,ஈ,உ,ஊ,எ,ஏ, ஐ,ஒ,ஓ,ஔ ஆகிய பன்னிரண்டு எழுத்துக்கள் இருக்கின்றன. இவற்றைவிட மெய்எழுத்துக்கள் என க்,ஞ்,ச்,ட்,ன்,ண், ர்,ழ்,ள்,ம்,ப்,த்,ங்,ல்,வ்,ந்,ற்,ய் ஆகிய பதினெட்டும் இருக்கின்றன. இவற்றை விட ஆயுத எழுத்து என ஃ மும் இருக்கின்றது. உயிர் எழுத்து பன்னிரண்டுடன் மெய்யெழுத்து பதினெட்டும் ஆயுத எழுத்தும் சேர்ந்து முப்பத்தியொரு எழுத்துக்கள் உள்ளன. இந்த 31 எழுத்துக்களைவிட உயிர் எழுத்தும் மெய் எழுத்தும் சேர்ந்து உயிர்மெய் எழுத்து என 216 எழுத்துக்களும் இருக்கின்றன.

மெய் எழுத்தான 'க்' உடன், உயிர் எழுத்தான 'அ' சேரும் பொழுது 'க' என்ற எழுத்து வருகின்றது. இங்கு 'க' என்ற எழுத்தை உற்று நோக்கில் மெய் எழுத்தான 'க்' ல் மேலே உள்ள குற்று இல்லாது போக 'க' என்ற எழுத்து வருகின்றது. இப்படி ஒவ்வொரு உயிர் எழுத்துடன் மெய் எழுத்தான 'க்' சேரும்போது ஒவ்வொரு உயிர்மெய் எழுத்துக்கள் தோன்றும். அதாவது கா, கி, கீ, கு, கூ, கெ, கே, கொ, கோ, கை, ...... என்பன. இதேபோல் த் என்ற எழுத்துடன் உயிர் எழுத்துக்கள் சேரும்போது த, தா, தி, தீ, ......... ஆகிய உயிர் மெய் எழுத்துக்கள் தோன்றும். இப்படி ஒவ்வொரு மெய் எழுத்துக்களும் ஒவ்வொரு உயிர் எழுத்துக்களுடன் சேரும் பொழுது ஒவ்வொரு உயிர்மெய் எழுத்துக்கள் உருவாகும். இந்த உயிர்மெய் எழுத்துக்களை நாம் எழுதும்போது அவற்றில் எவ்வித உருமாற்றமும் செய்வதில்லை. நாம் உருமாற்றம் செய்தால், அந்த எழுத்து நாம் உச்சரிக்கும் எழுத்தாக மாட்டாது. உதாரணத்திற்கு த என்ற எழுத்திற்கு கீழேயுள்ள கால் போடாதுவிடில் அது ச என்று ஆகிவிடலாம். இந்த அனைத்து உயிர்மெய் எழுத்துக்களிலும் மெய் எழுத்தின் சாயல் அப்படியே உள்ளது. அதாவது க் என்பது க என்றாகி வருகின்றது. த் என்பது த என்றாகின்றது. ச் என்பது ச என்றாகின்றது. மெய்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எழுத்துடன் அ என்ற உயிர் எழுத்துச் சேரும்பொழுது வருகின்ற உயிர்மெய் எழுத்தானது, மெய் எழுத்தின் மேலுள்ள குற்றினை நீக்கும்போது வரும் எழுத்தாகின்றது. க்+அ=க ஆகின்றது. இப்படி ச, ங, ப, ..... வருகின்றன. அதேபோல் கி, கீ போன்றவையும் குற்று நீக்கப்பட்ட மெய் எழுத்தின் மேல் 'ி' அல்லது 'ீ' யைப் போட்டு எழுதுகின்றோம்.

இதனை நாம் நோக்கும் போது ம அல்லது மி என்ற உயிர்மெய் எழுத்தில் சேர்ந்துள்ள எழுத்துக்களைப் பிரிக்கும்போது ம்+அ வும், ம்+ஈ வும் ஆக வரும். இப்படியே ஒவ்வொரு உயிர் மெய் எழுத்தும் அமையும். ர என்பதைப் பிரித்தால் ர் என்பதும், அ என்பதும் வரும். ரி என்பது ர்+ஈ என்றும் வரும்.

ஆனால் நாம் எழுதும் போது ர் என்றும் ரி என்றும் எழுதுகின் றோம். பெரும்பாலான தமிழ் புத்தகங்களிலும் ா(அரவு)தான் உள்ளது. இது சரியாகுமா?. ர வின்(ர்) மேல் தானே குற்று வரும்போது அது ர் என்ற மெய் எழுத்தாகின்றது. மெய் எழுத்துக்களில் உள்ள அனைத்து எழுத்துகளுடனும் அ என்ற உயிர் எழுத்து சேரும் போது வருகின்ற எழுத்தானது, மெய் எழுத்தில் உள்ள குற்றினை நீக்கிய எழுத்தாகவே உள்ளது. ஆனால் ர் என்பது மட்டும் எப்படி மாறியது. தமிழ் எழுத்தில் ா(அரவு), ை(சங்கிலி கொம்பு) போன்ற எழுத்துக்களும் இருக்கின்றன என்ப தனையும் நினைவிற்கொள்ளவேண்டும்.

ன்+ஐ என்பது னை என்று வரவேண்டும். க்+ஐ என்பது கை என்றும், த்+ஐ என்பது தை எனவும் வருவது போலவே னை என்ற எழுத்தும் ணை என்பதும் எழுத வேண்டும்.

(இவைபற்றிய உங்கள் கருத்துக்களையும் எழுதுங்கள்)

# யாரொடும் பகை கொள்ளற்க

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

கம்பன் யாரொடும் பகை கொள்ளக்கூடாது என்கிற வாழ்க்கை நெறியை வலியுறுத்து கிறான்.

யாரொடும் பகை கொள்ளலன் என்றபின்
போர் ஒடுங்கும், புகழ் ஒடுங்காது, தன்
தார் ஒடுங்கல் செல்லாது, அது தந்தபின்
வேரொடும் கெடல் வேண்டல் உண்டாகுமோ?

ஆம்! கருத்து வேற்றுமைகள் வரலாம். உடன்பாடு இல்லாமற் போகலாம்!. இவை பகையாக வளரவேண்டிய அவசியமில்லை. பகை வளரின் கலகம், போர் முதலிய அழிவுச் செயல்கள் நிகழும். கம்பன் உயிர்க்குல ஒருமைப்பாட்டை உணர்த்து கின்றான். இராமன் காட்டிற்கு வந்த இடத்தில் அவனுடன் உடன்பிறந்தவர்கள் எண்ணிக்கை ஏழு ஆயிற்று.

குகனொடு ஐவர் ஆனோம்
முன்பு, பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனோம்,
எம்முறை அன்பின் வந்த
அகன்அமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனோம்
புகல் அருங் கானம் தந்த
புதல்வரால் பொலிந்தான் நுந்தை!

என்ற பாடலை ஓர்க. இன்று பல நாள் பழகினாலும் உடன் பிறப்பாளரை, உறவி னரைத் தேர்ந்தெடுக்க இயலாதநிலையில் அன்பு ஊற்று சுயநலத்தால், ஆணவத்தால் தூர்ந்து கொண்டு வருகிறது. இந்தநிலை நமது சமுதாயத்திற்கு நல்லதன்று. பகை யைத் தவிர்க்கும்படி கம்பன் அறிவுறுத்து கிறான். பகையைத் தவிர்த்தால் போர் ஒடுங்கும் என்பது கம்பன் கருத்து. போர் ஒடுங்குவதால் பாருக்கும் புகழ் குறையாது என்றும் உறுதி கூறுகின்றான். மக்களுக்குள் அடிக்கடி சண்டை! வீடுகளுக்கு தீ வைப்பு! பேருந்துக்கு நெருப்பு! கொலை, கொள்ளை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவை ஏன்?. வலிமையைக் காட்ட விரும்பு கின்றார்கள்! வறுமைப் புன்மைச் சாதிகளை எதிர்த்துப் போராடுவதில் வலிமையைக் காட்டலாமே! ஆற்றலை, அடுத்தவனைக் கெடுப்பதற்குப் பதில், அடுத்தவனிடம் காட்டுவதற்குப் பதில், தரிசு நிலங்களைப் பசுமைப் புரட்சி செய்வதில் காட்டலாமே! நல்லதற்காகப் போர் என்று கூறுவது கூடச் சமாதானம் தான்! ஆனால் இஃது உண்மையன்று. நல்லதை அமைதி வழியாகவும் சாதிக்கலாம். எந்தப் போரும் சிக்கல்களைத் தவிர்த்ததாக வரலாறு இல்லை! போரின் மூலம் சிக்கல்கள் வளர்ந்துள்ளன. அதுமட்டுமா? மனிதர்களிடையே வஞ்சினமும் கடின சித்தமும் தோன்றி வளர்ந்து வருகின்றன. வரலாறு திரும்புகிறது என்பது அறிவார்ந்த நிலையன்று. வரலாற்றில் இருந்த படிப்பினைகளைக் கற்றுக்கொண்டு, வரலாற்றைப் புதுப்பிப்பதே வாழும் மாந்தர் கடமை. வரலாறு திரும்பத் திரும்ப வருதல் சிந்தனையும் செயலுமற்ற மாந்தர் வாழும் உலகில்தான் நிகழும். நமது நாட்டைப் பொறுத்தவரையில் வரலாற்றில் மாற்றம் இல்லை. பல நூறு ஆண்டுகளாக மாற்றம் இல்லை.

இன்று போரற்ற உலகம் தேவை. படைக்கலன்கள் குறிப்பாக அணு ஆயுதங்கள் உற்பத்தி செய்வதை நிறுத்த வேண்டும். தடை செய்யவேண்டும். உலக நாடுகளவை (ஐ.நா சபை) உண்மையிலேயே உலக நாடுகளின் அவையாக விளங்க வேண்டும். உலக நாடுகளின் அவையில் உள்ள நாடுகள் சிறியதாயினும், பெரியதாயினும் தைரியத்துடனும், உறுதியுடனும் வல்லரசுகளுக்குப் பயப்படாமல் வாக்களிக்கும் நிலமையை உருவாக்க வேண்டும். வரலாறு கொடிய போர்களைக் கண்டு, பலகோடி மக்களைப் பலி கொடுத்தாயிற்று. பல நூறு ஆண்டுகள் உழைப்பினால் உருவான உடமைகளைச் சொத்துக்களை இழந்தாயிற்று! இனிப் போர் வந்தால் மனிதப் பூண்டே இருக்காது. பழைய கற்றுகாலத்திற்கு செல்ல வேண்டியதுதான்! ஆதலால், போரினைத் தவிர்க்க வேண்டும். பேரரசுகள், சிறிய நாடுகளைப் பொருளாதார ஆதாயத்தைக் காட்டித் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வர முயற்சிசெய்யக் கூடாது. எந்த ஒரு நாட்டிலும் எதற்காகவும் காந்திய நெறியில், அறவழியில் போராடவேண்டுமே தவிரப் படை அடிப்படையிலும் வன்முறையிலும் போராடுவதை ஊக்குவிக்கக்கூடாது. உதவி செய்யக் கூடாது. சமய அடிப்படையில் கூடப் போரினை நினைவூட்டும் திருவிழாக்களை நிறுத்தி விடுவதே நல்லது. பள்ளிகளில், கல்லூரிகளில் பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி முதலியவற்றுடன் பண்பாட்டுப்போட்டி, சண்டைபோடாமைப்போட்டி ஆகிய போட்டிகள் வைத்துப் பரிசுகள் வழங்கலாம்.

அழித்தல் அறமன்று. திருத்தப்படுதலும் வாழ்விக்கப்படுதலும் அறம். தமிழ் மரபு. ஆக இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு போர் வராமைக்குக் காரணம் அச்சமேயாகும். அறநெறி சார்ந்த எண்ணத்தினால் அன்று. வீட்டையும், நாட்டையும் அமைதியில் நடத்துக. புவிக்கோளம் அழியாமல் பாதுகாக்கப்படும்.

யாதும் ஊரே! யாவரும் கேளிர்

என்பதும்

காக்கை குருவி எங்கள் சாதி-நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்

என்பதும் நமது மந்திரங்களாகட்டும். வாழ்க்கை நெறியாகட்டும். கம்பனை காலத்தைவென்ற கவிஞனாக்க வேண்டும். அதற்குள்ள ஒரேவழி கம்பன் கண்ட நாட்டை, ஆட்சியைக் காண்பதுதான்.

(நன்றி. கம்பன்)

**மற்றவரைத் தாக்கி வீழ்த்துகிறவன் வீரனல்ல. கோபம் வரும் சமயம் அதை அடக்கிக் கொள்பவனே வீரனாவானன்.**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குறள் விளக்கம்

## 'பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம் சால மிகுத்துப் பெயின்' (குறள் 475)

திருவள்ளுவர் ஒருநாள் தெரு வழியே நடந்து போய்க்கொண்டிருந்தார். ஒரு வண்டிக்காரன் மயில் தோகைகளைச் சுமையாகக் கட்டி வண்டியில் ஏற்றிக்கொண்டிருந்தான். திருவள்ளுவரின் கண்களை மயில் தோகையின் கண்கள் கவர்ந்தன. அருகில் சென்று தொட்டுப்பார்த்தார். அது பட்டினும் பளபளப்பாய், பஞ்சினும் மென்மையாய், எடையிலும் மிக எளிதாய் தோன்றியது. என்றாலும் அதைக் கொண்டு இரும்புத் தூணையும் முறிக்கலாம் என்ற முடிவுக்கு வந்துவிட்டார்.

திருவள்ளுவர் என்ன செய்தார் தெரியுமா?. வண்டிக்காரனைக் கூப்பிட்டு, "தம்பி, மயில் தோகையாயிருந்தாலும் அளவுக்கு மீறி வண்டியில் ஏற்றாதே, ஏற்றினால் அச்சு முறிந்துவிடும்" என்று அருமையாகக் கூறினார். மேலேயுள்ள குறள் தான் அது. பீலி என்பது மயில் தோகையையும், சகடு என்பது வண்டியையும் குறிக்கும். இக்குறள் மயில் தோகையையும் வண்டியையும் பற்றியது மட்டுமல்லாமல், வாழ்க்கையின் பல துறைகளிலும் அடங்கியிருப்பதைக் காணலாம்.

"அளவுக்கு மீறினால் அச்சு முறிந்துவிடும்" என்பதில் வாயும் உணவும்கூட அடங்கியிருக்கின்றன. சுவை மிகுதியினால் உணவை அதிக மாக உண்டுவிட்டால், "அச்சு முறிவது போல இவ்வுலக வாழ்வும் முறிந்துவிடும்" என்ற கருத்தும் இதில் அடங்கியுள்ளது.

நட்புக்கும் அளவுண்டு. அளவுக்கு மீறினால் அது நட்புக்கொண்ட உள்ளத் தையே முறித்துவிடும் என்ற கருத்தும் இதில் அடங்கியுள்ளது.

தன் நிலமையை உணர்ந்து, வருவாயை உணர்ந்து பொருளை எண்ணிச் செலவு செய்யவேண்டும். அளவுக்கு மீறிவிடுமானால், அச்சு முறிவ தைப் போன்று அச்செல்வமும் முறிந்து விடும் என்பதனையும் அவர் கூறாமற் கூறியிருக்கிறார்.

அவைகளில் நிகழ்த்துகின்ற சொற்பொழிவும் அளவோடு இருக்க வேண்டும். அது அளவுக்குமீறி நீண்டு விடுமானால், அச்சு முறிவதைப் போன்று அவையோர் உள்ளத்தை முறித்துவிடும் என்பதும் அக்குறளில் பொதிந்துள்ளது.

மனைவியை, மக்களை, தம்பியை தங்கையை அடக்கி வளர்க்கவேண் டியது தன் கடமையென குடும்பத் தலை வன் கருதுகிறான். இருந்தாலும் அது அளவுக்கு மீறிவிடுமானால், அச்சு முறிவதைப்போன்று, அது குடும்பத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தையே முறித்துவிடும் என்ற கருத்தும் இந்தக் குறளில் இல்லாமல் இல்லை.

மாடிமீது கட்டப்படும் கட்டிடங்களுக்கும் ஒரு அளவு வேண்டும். அவை அளவுக்கு மீறிவிடுமானால், அச்சு முறிவதைப்போன்று அக்கட்டிடமும் முறிந்துவிடும் என்பதும் இந்தக் குறளில் உள்ளது.

வேலை செய்யும் ஆட்களிடத்தில் தமது அதிகாரத்தைக் காட்டி மிரட்டுவதற்கும் ஒரு அளவு உண்டு. அளவுக்கு மீறிவிடுமானால் அச்சு முறிவதைப்போல அதிகாரமும் முறிந்துவிடும் என்ற கருத்தும் மறைந்து காணப்படுகிறது.

தொழிலாளர்களின் உழைப்பிலிருந்து வருகின்ற வருமானத்தை அடைவதற்கும் ஓர் எல்லையுண்டு. அது அளவுக்கு மீறிவிடுமானால், மயில் தோகையின் கட்டுப்பாட்டினால் இரும்பு அச்சு முறிந்து போவதுபோல் தொழிலாளர்களின் ஒற்றுமையினால் முதலாளித்துவமும் முறிந்துவிடும் என்ற சமதர்மக் கொள்கையும் இதில் சார்ந்துள்ளது.

அரசன் தன் குடிமக்கள்மீது செலுத்தும் ஆதிக்கத்திற்கும் ஓர் அளவு இருக்கவேண்டும். அளவுக்கு மீறிவிடுமானால், சட சடவென்று அச்சு முறிவதைப் போன்று, யார் ஆட்சியாக இருந்தாலும் முறிந்துவிடும் என்ற பொதுவுடமைக் கொள்கையும் இந்தக் குறளில் புகுந்து கொண்டுள்ளது.

வள்ளுவர் எப்படி?. அவரின் குறள் எப்படி?. இந்தக் குறள் எப்படி?. இதில் கூறியுள்ள கருத்துக்கள் எப்படி?. மயில் தோகை வள்ளுவருக்குப் பயன்பட்டது எப்படி?. மற்றவர்களுக்குப் பயன்பட்டது எப்படி?. இப்படியான திருக்குறளைப் படிக்காமல் இருக்கும் நாம் எப்படி?.

தமிழ் நூல்கள் அனைத்தையும் படிக்க முடியாது போனாலும், திருக்குறள் ஒன்றையாவது படித்தாக வேண்டும். அதுவும் முடியாவிடில், திருக்குறளைப் படிக்க வேண்டும் என்ற ஆசையாவது இப்போது உண்டாகட்டும்.

வளரட்டும் தமிழ்மொழி.

(நன்றி. டாக்டர் பெ.விசுவநாதம்)

# "தாலி பெண்ணுக்கு வேலி"

தமிழர்களின் கலாச்சாரத்தில்தான் தாலி என்பது இருக்கின்றது. தமிழர்கள் எனக் கூறும்பொழுது, இந்துக்கள், சைவ சமயத்தவர்கள், கிறிஸ்தவர்கள் இதில் அடங்குவர். இவர்கள் அனைவரினதும் திருமணத்தின் போதும் மணமகனால் மணமகளின் கழுத்தில் தாலி என்பது அணிவிக்கப்படும். இதில் தாலி என்பதனை மத அடையாளமாக நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

அப்படியாயின் தாலி என்பது பெண்களின் கழுத்தில் அணியப்படுவதற்கான காரணம் என்ன என்பதனை ஆராய்ந்தால், இந்தியாவில் முஸ்லீம்களின் படையெடுப்பின் போது திருமணமான பெண்களையும், திருமணமாகாத பெண்களையும் வேறு படுத்திக் காட்டுவதற்காக, திருமணமானவர்களின் கழுத்தில் பனை ஓலையால் செய்த ஓர் ஆபரணத்தை அணிவித்ததாக தமிழர்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திருமணம் எனும் நூல் கூறுகின்றது. பனை ஓலையில் இருந்த தாலி பின்பு செம்பு, வெள்ளியாகவும் பின்பு தங்கமாகவும் மாறியது. பதினோராம் நூற்றாண்டில் தாலி என்பது பெண்ணிற்கு வேலியாகவே இருந்தது. ஏனெனில், அப்போது நடந்த முஸ்லீம்களின் படையெடுப்பின் போது அவர்கள், கண்ணில் கண்ட பெண்கள் அனைவரையும் துன்புறுத்தினார்கள். திருமணமான பெண்களை மட்டும் தவிர்த்து விடுவார்களாம். அதனால் ஒரு பெண் திருமணமானவள் என்பதைத் தெரியப்படுத்த பனை ஓலையில் செய்த ஆபரணம் ஒன்றினை கழுத்தில் அணிந்து கொண்டாள். தாளி என்றால் பனை. பிற்காலத்தில் அது மருவித் தாலி என்றாகிவிட்டது. ஒரு பெண் கழுத்தில் தாலியுடன் வந்தால் அவளை முஸ்லீம்கள் துன்புறுத்தாமல் விட்டதாலேயே தாலி பெண்ணுக்கு வேலி என்ற பழமொழி உருவாகியது.

# உனை நீ அறிவாய்

ஒரு சிறு குழந்தை தன் தந்தையைப் பார்த்து "தங்கம் என்றால் என்ன?" எனக் கேட்டது. அதற்குத் தந்தை தன்னிடமிருந்த ஒரு தங்க மோதிரம் ஒன்றினைக் காட்டி விளக்கினார்.

"இப்படி வளைந்திருப்பதுதான் தங்கமா?" எனக் குழந்தை கேட்டது.

"இல்லை" இது தந்தையின் பதிலாக இருந்தது.

"மஞ்சளாக இருப்பதுதான் தங்கமா" இது குழந்தையின் அடுத்த கேள்வி.

"இல்லை, மஞ்சளாக இருப்பது எல்லாம் தங்கமல்ல" என்றார் தந்தை.

அப்படியாயின் "இப்படி வழவழப்பாகவோ, கனப்பதுபோல் இருப்பதுதான் தங்கமா?" எனக் குழந்தை வினவியது.

"இல்லை, வழவழப்பாகவோ, கனமாகவோ இருப்பது மட்டும் தங்கமல்ல" இது தந்தையின் பதிலாக இருந்தது.

இதைக் கேட்ட குழந்தை குழம்பியது. ஆனால் தந்தையோ மேலும் சில தங்கத்தாலான பொருட்களைக் காட்டி, தங்கம் என்றால் என்னவென விளக்கினார். குழந்தைக்குப் புரியாவிட்டாலும், புரிந்ததுபோல் தலையாட்டியது.

வீட்டிற்குள் ஒருவர் நுழைந்தார். மனைவி, அவரைக் கணவனாகக் கண்டார்.

மகன், தந்தையாகவும், தம்பி அண்ணனாகவும், பெற்றோர் மகனாகவும், நண்பர்கள் நண்பனாகவும், பாட்டியும் தாத்தாவும் பேரனாகவும் கண்டனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகக் கண்டார்கள். ஒவ்வொரு விதமாக அழைத்தார்கள்.

அப்படியாயின் உண்மையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவர் யார்?

இவை அனைத்தும் அவர் இந்த உலகில் பிறந்தபின் அவருக்கு வாய்த்தவைதானே. அவரின் பெயருங்கூட. பாதுகாத்து வளர்த்த இந்த உடம்பைக் கூட இறுதியில் விட்டுவிட்டுப் போக வேண்டியவர்தானே.

வடிவங்கள் அனைத்தையும் கழித்துவிட்டுப் பார்க்கும்போதுதான் தங்கம் என்னவென்பது புரியும். அதேபோல் அவன் யார் என்பதை சொந்தங்கள், பெயர்கள், அவன் உடல் சார்ந்த அத்தனையையும் கழித்துவிட்டுப் பார்த்தால்தான் புரியும். அப்படி அவனைப் புரிந்து கொண்டால், உன்னையும் புரிந்து கொள்வாய். உனைப் புரிந்தால் இவ்வுலகில் உள்ள அனைத்தையும் புரிந்துகொள்ள முடியும். யோசிப்போம்.

(நன்றி. பெருமாள்ராசு)

# மனம் ஒரு குரங்கு

சுகி.சிவம்.

"நான் மூச்சு விடுகிறேன்."
இதன் அர்த்தம் என்ன?. அதாவது உயிரு டன் இருப்பதாக அர்த்தம்.
"மூச்சு உங்களை விடுகிறது."
உயிர் போய்விட்டது என்று அர்த்தம். இப்போது உங்களைப் பார்த்துக் கேட்கிறேன். நீங்கள் மூச்சு விடுகிறீர்களா? அல்லது மூச்சு தன் இஷ்டத்துக்கு வந்து போகிறதா?. அது தன் விருப்பப்படி வந்து போகிறது என்றால் நீங்கள் விதியின் அடிமை. அந்த மூச்சுக் காற்றை உங்கள் ஆளுமையில் ஒழுங்கு படுத்தினால் விதி உங்கள் அடிமை. மனம் அடங்கவேண்டுமாயின் மூச்சும் ஒழுங்குபடவேண்டும். ஆனால் மனத்தை அடக்க எந்தவிதமான முரட்டுத் தனத்தையும் கையாள வேண்டாம். "அடக்குவேன்" என்ற முரட்டு எண்ணமே மனம் அடங்காமல் போகக் காரணமாக அமையும்.

ஒரு சாமியாரைப் பார்க்க ஒரு பணக்காரர் வந்தார். அவரைச் சாப்பிட்டுவிட்டுப் போகும்படி சாமியார் கேட்டுக்கொண்டார். சாமியார் தன்னோடிருந்த குரங்கைப் பார்த்து "ஏ" என்றார். குரங்கு ஓடிவந்து அந்தப் பணக்காரருக்கு இலை போட்டுவிட்டு சாமியார்முன் போய் பவ்வியமாக நின்றது. "சடார்" என தன்னிடமிருந்த தடியால் குரங்கின் மண்டையில் ஒரு அடிபோட்டார். அடி தாங்கமுடியாமல் கத்திக்கொண்டு குரங்கு உள்ளே ஓடியது. பின் சாதத்தைக் கொண்டுவந்து இலையில்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போட்டது. மறுபடியும் சாமியார் முன் போய் நின்றது. மீண்டும் மண்டையில் இன்னோர் அடி விழுந்தது. இப்படி ஒவ்வொரு தடவையும் பரிமாறும்போதும் இந்த அடிபடு படலம் தொடர்ந்தது. சாப்பிட்டுக் கொண்டிருந்தவர் பயந்துபோனார். "சுவாமி, இது என்ன கொடுமை. அது தப்புப் பண்ணினால் அடிக்கலாம். அது தப்பே செய்யவில்லையே. அதை அடிப்பது பாவம் சாமி. என்னால இதைப் பார்த்துக் கொண்டு சாப்பிட முடியவில்லை" என்றார். "சரி, இனி நான் அடிக்கமாட்டேன். எது நடந்தாலும் நீங்கள்தான் பொறுப்பு." என்று சொல்லித் தடியை கீழே வைத்தார். குரங்கு மற்றைய ஒன்றிரண்டு கறிகளையும் பரிமாறிவிட்டு, வழக்கம்போல் சாமியார் முன்போய் நின்றது. அடி விழவில்லை. அது பயந்துகொண்டே நெய் கொண்டுவந்து விட்டது. இப்போதும் அடி விழவில்லை. குரங்கு ஒருமாதிரி இளித்துக்கொண்டு வந்திருந்த விருந்தினரைப் பார்த்தது. குரங்கு நன்றி தெரிவிப்பதாக பெருமைப்பட்டார். சாம்பார் வாளியைக் கொண்டுவந்து அவர்முன் வைத்துவிட்டு அவரையும் சாமியாரையும் மாறிமாறிப் பார்த்தது. பின்பு, படக்கென்று சாம்பாருக்குள் கைவிட்டு அதில் கிடந்த கிழங்கை எடுத்து ஒருகடி கடித்தது. அருவருப்படைந்த விருந்தாளி "ஏ" என்று குரங்கை விரட்ட, அது அவரைப் பார்த்து உர் என்று உறுமியது. மீண்டும் சாம்பாருக்குள் கைவிட்டது. "சூ.. சூ" என்றார் அவர். அவரின் மூக்குக் கண்ணாடியை எடுத்துக் கொண்டது. "சாமி.. சாமி காப்பாத்துங்க" என்று பதறினார். உடனே சாமியார் தடியை எடுத்தார். கண்ணாடியை வீசிவிட்டு சாமியார் முன் வந்து பவ்வியமாக நின்றது. "சடார்" என்று அடி விழுந்தது. எல்லாம் சரியாகிவிட்டது.

இந்தக் குரங்கு போன்றதுதான் மனம். தவறு செய்தபிறகு தண்டித்துப் பயன் இல்லை. தவறு செய்யும் முன்பே அதை அடித்து ஒடுக்கவேண்டும். முடிந்தால் உங்கள் மனதை அடக்க முயற்சியுங்கள்.

ஒரு நாளைக்கு முப்பது நிமிடம் என, வாரத்திற்கு ஐந்து நாட்கள் நடப்பவர்களுக்கு, ஐம்பது சதவிகித சர்க்கரை நோய் அபாயத்தைத் தடுக்கலாம் என வைத்தியர்கள் கூறுகின்றார்கள். ஆனால் நடக்கும்போது தொடர்ச்சியாக நடப்பதுதான் நல்லது எனவும் கூறுகின்றனர். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதனை உணர்ந்து நடவுங்கள்.

**வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்.**

தொடர்புகளுக்கு: N. Varatharajah. 132 Rue des Fourches. 45500 GIEN. FRANCE.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்